//மின்னஞ்சலில்//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

சென்னை - 06

ந.க.எண். 46150 / அ4 / இ1 / 2020, நாள். 23.04.2021.

*****

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வி – சார்நிலை அலுவலருக்கான கணக்குத் தேர்வு பாகம்–1 – 10.03.2020க்கு முன் தேர்ச்சி பெற்று முன் ஊதிய உயர்வு வழங்கப்படாத பணியாளர்களுக்கு முன் ஊதிய உயர்வு அனுமதிக்கக் கோரியது – கூடுதல் விவரங்கள் கோருவது – தொடர்பாக.

பார்வை:

1. அரசுக் கடிதம் எண்.6540/பக4(2)/2021–2, நாள்.20.04.2021.
2. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் கடிதம் ந.க.எண்.46150/அ4/இ1/2020, நாள்.24.03.2021.

*****

பார்வை 2ல் காணும் கடிதத்துடன் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள பள்ளி மற்றும் அலுவலகங்களில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்களுக்கு கணக்குத் தேர்வு பாகம்–1 10.03.2020க்கு முன் தேர்ச்சி பெற்றமைக்கு, முன் ஊதிய உயர்வு வழங்குவது தொடர்பாக பார்வை 1ல் காணும் அரசுக் கடிதத்தில் கீழ்க்காணும் கூடுதல் விவரங்கள் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தனியர்கள் கணக்குத் தேர்வு பாகம்–1 எழுதியதற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகள், தேர்ச்சி பெற்றதற்கான அரசிதழ் அறிக்கையின் நகல்கள் (TNPSC Bulletin Copy) மற்றும் அப்பணியாளர்கள் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம்–1ல் தேர்ச்சி பெற்ற விவரங்கள் பதியப்பட்ட பணிப்பதிவேட்டின் நகல்கள்.

எனவே, மேற்காணும் விவரங்களை அனைத்து பணியாளர்களிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பும் பொருட்டு இரு நகல்களில் 30.04.2021க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

23.4.2021

நகல்: அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர்கள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் ஆய்வர், முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் மற்றும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள்.

நகல்: திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6.
நகல்: இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை–6.
நகல்: உறுப்பினர் செயலர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6.
நகல்: இயக்குநர், மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
நகல்: இயக்குநர், பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம், சென்னை–6.
நகல்: இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.

நகல் பணிந்து அனுப்பப்படுகிறது. காலிப்பணியிட மதிப்பீடு குறித்து தங்கள் அலுவலகம் சார்ந்த விவரங்களை இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் அனுப்பி வைக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல்: இவ்வலுவலக அ2 பிரிவு.